DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW3 examined as PW3** (recovery and eyewitness)

Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | மரியஜோசப்ராஜ் (இளநிலை வருவாய் ஆய்வாளர்) |
| Father's/Husband's Name | மரியசீலன் |
| Village | சீர்காழி தாலுக்கா |
| Taluk | தரங்கம்பாடி |
| Age | 41/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி தாலுக்காவில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2023 அன்று தரங்கம்பாடி தாலுகாவில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தேன். அன்று இரவு சுமார் 9.14 மணியளவில் தொலைபேசி வாயிலாக எங்களது வட்டவழங்கல் அலுவலர் விஜயகுமார் கஞ்சாநகரம் மெயின்ரோட்டில் ரேசன் அரிசிகளை பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கூறினார். அதன் அடிப்படையில் எனது இருசக்கரவாகனத்தில் 9.30 மணிக்கு நான் சென்ற போது வட்டவழங்கல் அலுவலர் மற்றும் கஞ்சாநகர கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் கஞ்சாநகர மெயின்ரோட்டில் காத்திருந்தனர். நாங்கள் மூவரும் ஸ்ரீராம் பென்சிங் கடைக்கு பின்புறம் உள்ள கீற்று கொட்டகையினுள் டார்ச் லைட் மற்றும் மொபைல் வெளிச்சத்தில் ஆய்வு செய்த போது சுமார் 300 வெள்ளை சாக்கு மூட்டைகளில் ரேசன் அரிசி காணப்பட்டது. ஒவ்வொரு மூட்டையும் சுமார் 50 கிலோ எடை கொண்டது. சாக்கு தைப்பதற்காக தையல்மிசின், மூட்டைகளை எடை போடுவதற்கான எடை மிசின் ஆகியவைகள் கீற்று கொட்டகைக்குள் இருந்தது. அதற்கு வெளியே டாடா ஏசி வாகனத்தில் 10 மூட்டை ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு கீற்று கொட்டகையின் உரிமையாளர் யார் என்று வட்டவழங்கல் அதிகாரி விசாரணை செய்த போது அதே கிராமத்தை சேர்ந்த மோகன்தாஸ் என்று தெரியவந்து அவரை விசாரணை செய்த போது அதே கிராமத்தை சேர்ந்த அப்பு என்கிற சத்தியசீலன் மற்றும் பிரசாந்த் என்பவருக்கு மாத வாடகை ரூ.3000/- வீதம் வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக கூறினார். டாடா ஏசி வாகனம் TN51 AZ3935 பதிவெண் கொண்ட வாகனம் ஆகும். மறுநாள் காலை 10 மணியளவில் மொத்தம் 310 அரிசி மூட்டைகளை கிடாரங்கொண்டான் சேமிப்பு கிடங்கில் வட்டவழங்கல் அலுவலர் ஒப்படைத்தார். மேற்கண்ட தையல்மிசின், எடைமிசின் டாடா ஏசி வாகனம் ஆகியவைகளை காவல் ஆய்வாளரிடம்

வட்டவழங்கல் அலுவலர் ஒப்படைத்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது பொது மக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருப்பார்கள். உங்களை போலீசார் விசாரித்த போது பொது மக்கள் யாரும் சாட்சிகளாக இருக்க முன்வராத விபரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அவர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. அரியலூரில், இருந்து காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் 11 மணிக்கு வந்தார். அன்றைய தினம் இரவே வட்டவழங்கல் அலுவலர் அவரிடம் புகார் கொடுத்தார். மணிகண்டன் என்ற காவல் ஆய்வாளர் தான் இருந்தார் என்றால் நினைவில் இல்லை. காவல் ஆய்வாளர் அன்றைய தினம் ஏதேனும் கைப்பற்றினாரா என்றால் இல்லை, மறுநாள் தான் தையல்மிசின், எடைமிசின், டாடாஏசி வாகனத்தை ஒப்படைத்தோம். காவல் ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து பெற்றார். கிராம நிர்வாக அலுவலரிடமும் மற்றும் வட்டவழங்கல் அலுவரிடமும் கையெழுத்து பெற்றார். நான் கையெழுத்து செய்த தாளில் கைப்பற்றுதல் சம்பந்தமான விபரம் எழுதியிருந்தது. காவல் ஆய்வாளர் தயார் செய்த தாளில் மறுநாள் தான் அரிசியை ஒப்படைத்த கிடாரங்கொண்டான் கிடங்கில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். ஆய்வாளர் கைப்பட எழுதி பேப்பரில் தான் நாங்கள் அனைவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். வட்டவழங்கல் அதிகாரி கொடுத்த பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் அரிசி மூட்டைகள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது போட்ட பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன தேதி நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மீடியாவை சேர்ந்தவர்கள் அங்கு வந்து வீடியோ எடுத்தனர். மறுநாள் அவை செய்திகளில் வெளியிடப்பட்டன. இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரிகள் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு **அவரால் சரியானது**தென்று ஏற்கப்பட்டது.

10.6.25
நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை